பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 08 வியாழக்கிழமை 21.01.2021 கதிர் 308

## மேல்மாகாணப் பாடசாலைகள் பெப்ரவரி மாதம் 15இல் திறப்பு!

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி முதல் மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாகக் கல்வி அமைச்சில் கடந்த புதன்கிழமை

2

# ராஜபக்ஷவினரை ஓட ஓட விரட்டியடிப்போம்!



## சம்பிக்க ரணவக்க எம்.பி. சூளுரை

பதவி ஆசையில் - அதிகார வெறியில் அராஜக ஆட்சி நடத்தும் ராஜபக்ஷவினரை விரைவில் வீட்டுக்கு ஓட ஓட விரட்டியடிப்போம்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் கடந்த 70 வருடகாலத்தில் இடம்பெற்ற அனைத்து நன்மை, தீமைகளுக்கும் சேனாநாயக்க - கொத்தலாவல பரம்பரை, பண்டாரநாயக்க - ரத்வத்தே பரம்பரை, ஜயவர்தன - விக்கிரமசிங்க பரம்பரை மற்றும் 2005ஆம் ஆண்டின் பின்னர் ராஜபக்ஷ பரம்பரை ஆகிய நான்குமே பொறுப்பேற்க வேண்டும். அவற்றில் ராஜபக்ஷ குடும்பம் அதிகாரத்தைத் துறப்பதற்குத் தயார் நிலையில் இல்லை என்பதுடன்

2

## இலங்கைக் கடற்படையினரின் டோறா மோதி

# இந்திய மீனவர்கள் நால்வர் மரணம்; தமிழ்க் கூட்டமைப்பு கடும் கண்டனம்

### அப்பாவிகளின் உயிரைப் பறிக்க வேண்டாம் எனவும் வலியுறுத்து

**(ந.லோகதயாளன்)**

**இலங்கைக் கடற்படையினரின் டோறா மோதியதால் உயிரிழந்த இந்திய மீனவர்கள் நால்வரினதும் உயிரிழப்புக்கும் வன்மையான கண்டனத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

**இலங்கைக் கடல் எல்லைப் பரப்பில் கடந்த திங் கட்கிழமை இரவு ஒரு ட்ரோலர் படகில் மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் நால்வர் உயிரிழந்தமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.**

2



## கொரோனாத் தொற்று சடுதியாக அதிகரிப்பு; இழுத்து மூடப்பட்டது வெள்ளவத்தை சந்தை

வெள்ளவத்தை பொதுச்சந்தையில் பணியாற்றிய 12 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, குறித்த சந்தை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என வெள்ளவத்தை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

சில நாள்களாக வெள்ளவத்தைப் பகுதியில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது.

கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் வெள்ளவத்தைப் பகுதியில் 23 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## படிப்படியாக அழிகிறது இலங்கை ஜனநாயகம்

### கோட்டா அரசு மீது ஜஸ்மின் சூக்கா பாய்ச்சல்

இலங்கையில் முன்னொருபோதும் இல்லாத அரச இயந்திர இராணுவ மயமாக்கல் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியில் இடம்பெறுகின்றது. இதனால் இலங்கையில் ஜனநாயகம் படிப்படியாக அழிக்கப்பட்டு வருகின்றது.

2



## நிலாவரைக் கிணறு அருகிலும் அகழ்வுப்பணிகள் முன்னெடுப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் - நிலாவரைக் கிணறு அருகில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளால் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இன்று முற்பகல் நிலாவரைக் கிணறு பகுதிக்கு வருகை தந்த தொல்பொருள் திணைக்கள

2



## எஞ்சிய இரு மீனவர்களின் சடலங்களும் இன்று மீட்பு!

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடல் எல்லையில் இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப் படகுடன் மோதி, ட்ரோலர் படகுடன் மூழ்கி மாயமான நான்கு இந்திய மீனவர்களில் எஞ்சிய இருவரது சடலங்கள் இன்று மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 18ஆம் திகதி புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினத்திலிருந்து

2

## குருந்தூர் மலை அகழ்வாராச்சியில் வெளிப்படைத் தன்மை அவசியம்!

### தமிழ்க் கூட்டமைப்பு வலியுறுத்து



குருந்தூர் மலைப்பகுதியில் சிவன் கோவில் அமைந்துள்ள நிலையில் அங்கு மறைமுகமாக தொல்லியல் ஆய்வுகள் நடைபெறுகின்றன. இதனை ஏற்கமுடியாது. ஆய்வுகளில் வெளிப்படைதன்மை அவசியம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி

2



## தலைவிரித்தாடும் அடக்குமுறைகள்!

### அரசைக் கண்டிக்கின்றார் ரிஷாத்

இந்த ஆட்சியில் சிறுபான்மை இன மக்கள் வேதனையின் உச்சத்தில் வாழ்கின்றனர். அந்தளவுக்கு இந்த ஆட்சியில் அடக்குமுறைகள் தலைவிரித்தாடுகின்றன.

- இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற

2

## குருந்தூர் மலை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு இது தொடர்பில் உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வன்னி மாவட்டத்தில் அரசின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டம் இறுக்கப்பட்டுள்ளது. குருந்தூர் மலைப்பகுதியில் சிவன் கோவில் உள்ளது. 1933 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியில் 'குருந்தூர் மலை' எனத்தான் விளிக்கப்பட்டுள்ளது. ஆரம்பம் முதல் தமிழ் பெயர் இருக்கும் நிலையில் தற்போது எதற்கு அவசர அவசரமாக அகழ்வாய்வு நடக்கின்றது?

கடந்த காலங்களில் தொல்லியல் ஆய்வு என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீக இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. திடீரென விகாரைகள் முளைத்தன. எனவே, குருந்தூர் மலை விவகாரத்திலும் எமது மக்களுக்கு சந்தேகம் இருக்கின்றது. மக்கள் வழிபடுவதற்கு தடை இருக்கக்கூடாது என நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், பொங்கல் வைத்து வழிபட சென்ற மக்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். இது விடயத்தில் நீதிமன்ற தீர்ப்பு மீறப்பட்டுள்ளது.

அகழ்வாய்வு ஏன் மறைமுகமாகச் செய்யப்படுகின்றது? இதில் வெளிப்படைத் தன்மை அவசியம். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்துவந்து செய்யும் நிலையில் வாழ். பல்கலைக்கழக பேராசிரியர்களையும், மாணவர்களையும் இதில் இணைத்துக்கொள்ளுமாறு நாம் கேட்டிருந்தோம். இது சம்பந்தமாக எமது தலைவர் சம்பந்தன் ஐயா, இராஜாங்க அமைச்சர் விதுரவுடன் பேச்சு நடத்தினார். இணைத்துக்கொள்வதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேச்சளவில் மட்டும் அல்லாமல் உறுதிமொழி நடைமுறைக்கு வரவேண்டும். வெளிப்படைத் தன்மையுடன் ஆராய்ச்சிகள் நடைபெறவேண்டும் - என்றார்.

## தலைவிரித்தாடும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இஸ்லாம் பற்றிய பூரண அறிவைப் புரிந்துகொள்ள, புனித அல்குர்ஆனுடன் சேர்த்து, அது அருளப்பட்ட பூரண பின்புலங்களை விளக்கும் ஹதீஸ்களையும் நல்லெண்ணத்துடன் அமைச்சர் உதய கம்மன்பில படிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் பேசிய அமைச்சர் உதய கம்மன்பில, அல்குர்ஆனை தான் படித்தார் எனவும், 'இறந்தவர்களின் உடல்களை எரிப்பது ஹறாம் என எங்கும் கூறப்படவில்லை எனவும் கூறியிருந்தார்.

அதற்குப்பதிலளிக்கும்வகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் நேற்று சபையில் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அல்குர்ஆனை மாத்திரமல்ல, ஸீசையும் சேர்த்துப்படியுங்கள். நல்லெண்ணத்துடன் இவைகளைப் படித்தால் சரியான தெளிவைப் பெறுவீர்கள்.

நாட்டின் இறைமைக்கும், ஒற்றுமைக்கும், ஏன் சுதந்திரத்துக்கும் கூட பாடுபட்டது முஸ்லிம் சமூகம். எனினும்., கொரோனாவால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றோம். எமது கண்ணுக்கு முன்னே சடலங்கள் பலவந்தமாக எரிக்கப்படுகின்றன. புகழ் பெற்ற நிபுணர்களும், இந்தத் துறையில் தேர்ச்சி பெற்ற மருத்துவ வல்லுநர்களும் ஜனாஸாக்களை அடக்க முடியும் எனச் சொன்ன பிறகும் இந்த அரசு, எதையும் காதில் வாங்கிக்கொள்ளவில்லை - என்றார்.

(மற்றுமொரு செய்தி 03ஆம் பக்கத்தில்)

## படிப்படியாக அழிகிறது ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் மற்றும் ஜனநாயகத்துக்கான இலங்கைப் பத்திரிகையாளர்கள் அமைப்பு ஆகியன கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பெரும் எண்ணிக்கையான ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் இலங்கையில் சிவில் சேவையில் பதவிகளைப் பொறுப்பெடுத்து வருகின்றனர்.

முன்னாள் இராணுவ அதிகாரியான ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவாலேயே அண்மையில் 39 இராணுவ அதிகாரிகளுக்கு முக்கிய அரச பதவிகள் வழங்கப்பட்டன.

இதனைவிட ஜனாதிபதியின் கைகளை அதிகார மயமாக்கல், உறவினர் ஆதரவுக் கொள்கை, நண்பர்களுக்கு அதிகாரம் வாய்ந்த பதவிகளை வழங்குதல் மற்றும் நீதிமன்ற வழக்குகள் எதிராக அப்போதும் இருக்கையில் அதிர்ச்சியளிக்கும் எண்ணிக்கையிலான ஆட்களை அரச பதவிகளுக்கு நியமித்தல் போன்றனவும் இடம்பெறுகின்றன. இது ஒரு திருட்டுத்தனமான சதிக்கு ஒப்பானதாகும். இலங்கையில் ஜனநாயகம் படிப்படியாக அழிக்கப்பட்டு வருகின்றது.

விசுவாசமான இராணுவ அதிகாரிகள் கொரோனாவுக்கான நடவடிக்கை, பொலிஸ், புலனாய்வு சேவைகள், சிறைகள், வெளிநாட்டுக் கொள்கை, விமான நிலையங்கள், துறைமுகங்கள், சுங்கம், அடிப்படைத் தேவைச் சேவைகள், விவசாயம், மீன்பிடி, நில அபிவிருத்தி, வனப்பாதுகாப்பு மற்றும் இறுதியாக இலஞ்ச ஆணைக்குழு ஆகியவற்றில் அதிகாரத்தைச் செலுத்தி வருகின்றனர்.

இது முன்னொருபோதும் இல்லாத அரச இயந்திர இராணுவமயமாக்கல் ஆகும். ஓய்வுபெற்ற மற்றும் பதவியில் இருக்கும் இராணுவ அதிகாரிகள் நிர்வாகப் பதவிகள், கட்சிப் பதவிகள் மற்றும் முக்கிய அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றுள்ளார்கள். இது அரசின் சிவில் குணமாச்சத்தின் முடிவைத் தீர்க்கமாகக் குறிக்கும்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நாட்டின் பொதுமக்களுக்கு எதிரான பயங்கரமான குற்றங்களைப் புரிந்ததாக இராணுவத்தினர் மீது சரமாரியான குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களை அரசியல் மற்றும் நிர்வாகக் களங்களில் தமது அதிகாரத்தை வலுப்படுத்த அனுமதித்தல் மீளமுடியாதஒருநிலைக்குவழிவகுக்கும் - என்றுள்ளது.

## ராஜபக்ஷவினரை ஓட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமுதாயத்தின் அனைத்துக் கட்டமைப்புக்களையும் ஆள்வதற்கு முற்படுகின்றது.

எமது எதிர்கால சந்ததியினர் மத்தியில் பாரிய சமுதாய மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு நாம் முன்னின்று செயற்பட வேண்டும். தற்போது நாட்டை ஆட்சி செய்கின்ற, எதிர்காலத்தில் ஆட்சி செய்வதற்கு எதிர்பார்த்திருக்கும் ராஜபக்ஷ குடும்பத்துக்கு அந்த இயலுமை இல்லை என்பது அவர்களது கடந்தகாலச் செயற்பாடுகளின் மூலம் உறுதியாகியிருக்கிறது.

தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் நெருக்கடி நிலைக்கு கடந்த 70 வருடங்களாக நாட்டை ஆட்சி செய்தவர்களே பொறுப்புக்கூற வேண்டும் என பரவலாகக் கூறப்படுகின்றது. எமது நாடு இலவசக்கல்வி, இலவச சுகாதாரசேவை ஆகியவற்றில் சிறந்த இடத்தில் இருந்தாலும் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை அது சிறந்த இடத்தை அடையவில்லை.

இந்நிலையில் எமது எதிர்கால சந்ததியினருக்கு இரத்தம் தோயாத சமுதாயமொன்றைக் கையளிக்கும் பொறுப்பு எமக்கு உள்ளது. இதனை உருவாக்குவதற்கு எவ்வித இன, மத, அரசியல், கட்சிபேதங்களுமின்றி திறமையுடைய அனைவருக்கும் அழைப்பு விடுக்க வேண்டும் - என்றார்.

## இந்திய மீனவர்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டும் மீனவர்களை எல்லையிலேயே தடுக்குமாறும், ஊடுருவும் மீனவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துமாறும் நாம் தொடர்ந்தும் கோரும் அதேநேரம் வாழ்வியலை நாடும் அப்பாவி மீனவர்களின் உயிர் பறிக்கும் செயலை ஒருபோதும் ஏற்கமாட்டோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடந்த 18ஆம் திகதி இரவு காணாமல்போன இந்திய மீனவர்களின் படகுடன் இலங்கைக் கடற்படையினரின் டோறா மோதியிருக்கலாம் என்ற சந்தேகமும், காணாமல்போன இந்திய மீனவர் படகில் இருந்த மீனவர்கள் நால்வருக்கும் என்ன நடந்தது என்ற அச்சமும் 18 ஆம் திகதி இரவு 11 மணி முதலே நிலவிய வேளை நேற்று மாலை இருவரினது சடலங்களும், இன்று மற்றைய இருவரினது சடலங்களும் இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் சடலங்களாக மீட்கப்பட்ட நால்வருக்கும் எமது அஞ்சலியைத் தெரிவிக்கும் அதேநேரம் இந்தச் சம்பவம் தொடர்பில் உறுதியான தகவலைக் கடற்படையினர் விரைவில் கண்டறிய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

இதேநேரம் உயிரைக் காக்க இந்தியாவுக்குத் தப்பியோடிய யாழ்ப்பாணம் இளைஞர் ஒருவரும் தனது வாழ்வாதாரத்தைக் கருதி இந்திய உறவுகளுடன் தொழிலுக்கு வந்த வேளை பரிதாபமாக உயிரிழந்தமை எமது உறவுகளின் அவலத்தை எடுத்தியம்புகின்றது.

உறவுகளை இழந்து தவிக்கும் தாய்த் தமிழகச் சொந்தங்களுக்கும் எமது மீனவரின் குடும்பத்தினருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றார்.

## நிலாவரைக் கிணறு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரிகள், மரம் ஒன்றின் கீழ் அகழ்வு நடவடிக்கையை முன்னெடுத்து ஆய்வுப் பணிகளை முன்னெடுத்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் ஆகியோர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

குறித்த இடத்தில் கட்டடம் ஒன்று இருந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது எனவும், அது தொடர்பில் ஆய்வுகளை நடத்தத் திட்டமிட்டுள்ளோம் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆய்வுப் பணிக்கான செலவு மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கான பணி இன்று முன்னெடுக்கப்பட்டது எனவும், செலவீட்டுக்கு அனுமதி கிடைத்ததும் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்படும் எனவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## மேல்மாகாணப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம் பெற்ற விடே கலந்துரையாடலின் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரைகளுக்கு அமைய இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்முறை கல்வி பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்காக எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் மேல் மாகாணத்திலுள்ள 907 பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## எஞ்சிய இரு மீனவர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஆரோக்கிய ஜேசு என்பவரது படகில் மேசியா, நாகராஜன், செந்தில் குமார், சாம் ஆகிய நால்வரும் மீன்பிடி அனுமதிச் சீட்டு பெற்று மீன்பிடிக்கக் கடலுக்குள் வந்திருந்தனர்.

மீனவர்கள் நெடுந்தீவுக்கும் கச்சத்தீவுக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது இலங்கைக் கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என வழக்குப் பதிவு செய்யப் போவதாக எச்சரித்துள்ளனர். இதனால் அச்சம் அடைந்த மீனவர்கள் அங்கிருந்து தப்ப முயன்றபோது இலங்கை கடற்படையினரின் ரோந்துக் கப்பல் மீது மோதியதில் படகு நடுக்கடலில் மூழ்கியது எனக் கூறப்படுகின்றது.

இதனால் படகில் இருந்த நால்வரும் நடுக்கடலில் மாயமானார்கள். அவர்களை இலங்கைக் கடற்படையினர் நெடுந்தீவுக் கடற்கரைப் பகுதியில் தேடிவந்த நிலையில் நேற்று இருவரது சடலங்கள் மீட்கப்பட்டன.

எஞ்சிய இரண்டு பேரைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வந்த நிலையில் இன்று நெடுந்தீவு அருகே கடற்படையின் மூன்றாம் நாள் தேடுதலின்போது எஞ்சிய மீனவர்களான நாகராஜன், மேசியா ஆகிய இருவரது சடலங்கள் மீட்கப்பட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு எடுத்துவரப்பட்டன.

இந்திய மீனவர்களின் சடலங்கள் மல்லாகம் நீதிமன்ற நீதிவானின் உத்தரவின் பேரில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இந்தியத் துணை தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000
இணையம் - onlinekathir.com

# விரைந்து செயற்படும் பைடன்

அமெரிக்க அதிபர்களில் மிகவும் வயதில் மூத்தவரான ஜோ பைடன் நேற்றுப் பதவியேற்றுள்ளார்.

அதிகாரத்துக்கு வந்த கையோடே அதிரடி உத்தரவுகளை அவர் பிறப்பிக்கத் தொடங்கி விட்டார்.

வெள்ளை மாளிகையும், அதிபர் பதவியும் அவருக்குத் தெரியாத விடயங்கள் அல்ல. வெள்ளை மாளிகையில் ஒபாமா ஜனாதிபதியாகக் கோலோச்சிய எட்டு வருடங்களும் அவரின் துணை ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர் ஜோ பைடன்.

ஆகவே, ஜனாதிபதி பதவியை எங்ஙனம் ஆற்றுவது, எத்தகைய உத்தரவில் எப்போது கையெழுத்திடலாம் என்பவை வரை சகலதும் அவருக்கு பரிச்சயமானவையே. அவை எவையும் அவருக்குப் புதிய விவகாரங்களே அல்ல.

அதனால் பதவியேற்ற மறுகணமே முழு மூச்சில் தமது கடமைகளை ஆற்றத் தொடங்கி விட்டார். நின்று, நிதானித்து, ஆலோசித்து, கலந்துரையாடிப் பார்த்திருக்க வேண்டிய தேவை அவருக்கு இருக்கவில்லை.

பதவியேற்ற கையோடே ஜோ பைடன், மின்னல் வேகத்தில் ஆணைகளில் ஒப்பமிட்டார் என்கின்றன பி.பி.ஸி. வட்டாரங்கள்.

இதற்கு முன் எந்த அமெரிக்க அதிபரும் பதவியேற்ற முதல் நாளில் கையெழுத்திட்ட ஆணைகளின் எண்ணிக்கையை விட பைடன் கையெழுத்திட்ட ஆணைகளின் எண்ணிக்கை அதிகம்.

பதவியேற்ற முதல் நாளில் அதிபர் ஜோ பைடன் கையெழுத்திட்ட நிர்வாக ஆணைகள் பதினைந்து. அதிபரின் குறிப்புகள் என்று பொருள்படும் அதிபர் 'மெமோ'க்கள் இரண்டு.

அதிபர் கதிரையில் அமர்ந்ததும் அவர் ஒப்பமிட்ட ஆணைகள் பலவும் மிகவும் முக்கியமானவை.

அதிபர் ட்ரம்ப் சர்வதேச ரீதியில் செய்த பல குளறுபடிகளைச் சீர்செய்யும் உத்தரவுகளையே புதிய அதிபர் ஜோ பைடன் பிறப்பித்தார் என்பது அவதானிக்கப்பட வேண்டும்.

பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறும் அதிரடி முடிவை அறிவித்துச் செயற்படுத்தியிருந்தார் அதிபர் ட்ரம்ப். அதை மாற்றி அதில் சேருவதற்கான ஏற்பாட்டுக்கு உத்தரவிட்ட பைடன், பருவநிலை மாற்றம் பற்றிய உலகளாவிய சிரத்தை புதிய பைடன் அரசின் முன்னுரிமைகளில் ஒன்று என்று அறிவித்தார்.

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த அமெரிக்க மக்கள் முகக் கவசம் அணிவது அவசியம் என்ற உத்தரவை அவர் பிறப்பித்தார்.

சில முஸ்லிம் நாட்டு மக்கள் அமெரிக்காவுக்கு வருவதைத் தடை செய்யும் விதத்தில் / இனப்பாகுபாட்டைக் காட்டும் கீழ்த்தரமான போக்கில் – அதிபர் ட்ரம்ப் விடுத்த உத்தரவை பைடன் விலக்கிக் கொண்டார்.

மெக்ஸிக்கோ – அமெரிக்கா இடையில் தடுப்புச் சுவர் கட்டும் பாரிய திட்டம் ஒன்றை – கோமாளித் தனமான நடவடிக்கையை – ட்ரம்ப் நிர்வாகம் முன்னெடுத்தது. முதல் கட்டமாக பெரும் தொகை நிதியை அதற்காக வீணாக்கியது அந்த ஆட்சிப் பீடம். இது தொடர்பில் ட்ரம்ப் பிறப்பித்த அவசரகால உத்தரவுகளை வாபஸ் பெறும் கட்டளையை அதிகாரத்துக்கு வந்த முதல் நாளே பிறப்பித்தார் ஜோ பைடன்.

இனப்பாகுபாட்டுக்கு எதிரான, பாலின சமத்துவத்தை வலியுறுத்துகின்ற சில உத்தரவுகளிலும் ஜோ பைடன் கையெழுத்திட்டார்.

சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த உலக சுகாதார ஸ்தாபனத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறும், சுகாதார ஸ்தாபனத்துக்கு அமெரிக்கா வழங்கி வந்த நிதி உதவிகள் நிறுத்தப்படும் என்று அறிவித்து ட்ரம்ப் நிர்வாகம் முட்டாள்தனமாக மேற்கொண்ட நடவடிக்கை உடன் நிறுத்தப் பணித்தார் புதிய அதிபர் ஜோ பைடன்.

ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியா குட்டரஸ் புதிய அமெரிக்க அதிபரின் இந்த முடிவை வரவேற்றிருக்கின்றமை கவனிக்கத்தக்கதாகும்.

ட்ரம்ப் காலக் கொள்கைகள் பலவும் தவறான கற்பித்தங்களில் எழுந்தவை என்ற சாரப்பட கருத்து வெளியிட்டுள்ள ஜோ பைடனின் புதிய நிர்வாகம், அவற்றில் மாற்றங்களைக் கொண்டு வரப் பின்னிற்கப் போவதில்லை என்றும் தெரிவித்திருக்கின்றது.

சரியோ, பிழையோ ட்ரம்ப் காலத்துக் குளறுபடிக் கொள்கைகளினால் – மெத்தனப் போக்கினால் – கொரோனாத் தொற்றுப் பரவல் விவகாரம் உட்பட பல விடயங்களில் அமெரிக்கா வரலாற்றுச் சிக்கலில் உள்ளது என்று பி.பி.ஸி. குறிப்பிடுவது சரியானது தான்.

இந்த விடயங்களில் இருந்து அமெரிக்கா தப்பிப் பிழைத்து மீண்டு வரவேண்டும் என்றால் காத்திரமான பல முடிவுகளை, துணிச்சலுடனும், விரைந்தும், தீர்க்கமாகவும் அது எடுக்க வேண்டியிருக்கும். இராஜீக நிர்வாக விடயங்களில் மிகுந்த அனுபவஸ்தரான ஜோ பைடன் மனவுறுதியோடு அவற்றை முன்னெடுப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

ஜெனீவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலிருந்து வெளியேறும் முரட்டுப் பிடிவாத முடிவையும் ட்ரம்ப் நிர்வாகம் எடுத்திருந்தது. அதையும் ஜோ பைடனின் புதிய அதிகார மையம் மாற்றியமைக்கும் என நம்பலாம்.

# தமிழர்களின் பகுதிகள் மீதான ஆக்கிரமிப்பின் ஆரம்பமே குருந்தூர் மலையில் அரங்கேற்றம்!

## சிவமோகன் தெரிவிப்பு



தமிழர் பகுதிகள் மீது ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்கான ஆரம்பகட்டமாகவே குருந்தூர் மலை விடயத்தை பார்ப்பதாக வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொல்லியல் திணைக்களத்தாலும் பொலிஸாராலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குமுழமுனையில் அமைந்துள்ள தமிழர் வழிபாட்டுப் பிரதேசமான குருந்தூர் மலைக்கு நேரடியாக விஜயம் ஒன்றை கடந்த செவ்வாய்க்கிழமை அவர் மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையிலேயே இந்த விடயம் தொடர்பாக சி.சிவமோகன் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

இதுவொரு தமிழர் பிரதேசம். இங்கு எமது மக்களால் ஐயனார் ஆலயம் பராமரிக்கப்பட்டு அதனை வழிபட்டு வந்தனர் என்பதுதான் தமிழர் வரலாறு.

இனரீதியாக தமிழர்களுக்கெதிராக உயர் மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்றுக்கமைவாக பொய்யைக் கூறி, தொல்லியல் திணைக்களம் ஆராய்ச்சி என்ற போர்வையில் இங்கு வந்துள்ளது.

மேலும், திட்டமிட்டு தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தால் தமிழர் பகுதிகள் மீதான ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்கான ஆரம்ப கட்டமாகவே நான் இதனைப் பார்க்கிறேன்.

இந்தச் செயற்பாட்டின் மூலம் முல்லை மண்ணில் பாரிய ஆக்கிரமிப்பு ஒன்று நடைபெறுகின்றது. இந்த ஆக்கிரமிப்பில் இருந்து நாம் எப்படிப் பாதுகாப்பாக இருக்கப்போகிறோம் என்பது கேள்விக்குறியான ஒன்றாகவே இருக்கிறது.

இந்த மலையின் கரைப்பக்கமாகத் தான் எங்களால் வரமுடிந்துள்ளது. இந்த மலையில் ஏறி என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வெளிப்படைத்தன்மையாக தொல்பொருள் ஆராய்ச்சிகள் எதுவும் நடக்கவில்லை என்பதற்கு இதுவோர் ஆதாரம்.

நான் ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்று கூறியிருந்தும் அவர்கள் என்னை மலைப்பிரதேசத்திற்குள் செல்ல அனுமதிக்கவில்லை. உண்மையாக ஒரு தொல்பொருள் ஆராய்ச்சிகள் நடைபெற வேண்டுமாகவிருந்தால் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள் அனைவரும் உள்வாங்கப்பட்டு இது செய்யப்பட்டிருக்கவேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பிரதேச காணிப் பயன்பாட்டுக் குழுக்கூட்டத்துக்கு ஒட்டுசுட்டானில் ஊடகங்களுக்கு அனுமதி மறுப்பு

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் மக்களின் காணிப்பிணக்குகளை தீர்ப்பதற்கு பிரதேச செயலாளர் தலைமையிலான கூட்டமொன்று கிராம மட்ட அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோரை அழைத்து நடைபெற்றுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பல மக்களின் காணிப்பிணக்குகள், மீள்குடியேற்றப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இன்னும் தீர்த்துவைக்கப்படாத நிலைதொடர்ந்து கொண்டு வருகின்றது.

மேலும் பாதிக்கப்பட்ட மக்கள் பலர், மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தும் எதுவித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்நிலையில் நேற்று (புதன்கிழமை), காணிப்பிணக்கு கூட்டம் நடைபெற்று வரும் நிலையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் வாசலில் தனது சொந்தக் காணியை மீட்டுத்தர கோரி, காணி உரிமையாளர் ஒருவர் கவனவீர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்.

காணிப்பயன்பாட்டுக்குழுக் கூட்டம் மாநாட்டு மண்டபத்தில் கதவுகள் பூட்டப்பட்ட நிலையில் நடைபெற்று வந்தவேளை செய்திசேகரிக்க சென்ற ஊடகவியலாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன், சற்று நேரம் கழித்து காணொளி எடுக்கமுடியாது என்றும் தகவல் திரட்டில் ஈடுபடலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் உண்மையான பிரச்சினைகளை வெளியில் கொண்டுவரமுடியாத நிலை இங்கு காணப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# 12 ஆண்டுகளுக்கு முன் இராணுவத் தளம்மீது தாக்கு: ஜேர்மன் நீதிமன்றில் விசாரிக்கப்படவுள்ள தமிழ் அகதி!

12 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை இராணுவத் தளம் மீது பயங்கரவாதத் தாக்குதல் மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்படும், இலங்கைத் தமிழ் அகதி ஒருவர் ஜேர்மனியின் உயர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படவுள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதி தனது 2018 அகதி விண்ணப்பத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக மாநில சட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த அகதிக்கு 15 வயதாக இருந்தபோது இந்த சம்பவம் நடந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், இந்த தாக்குதலில் பொது மக்களும் காயமடைந்தார்களா அல்லது அனைவரும் இலங்கை இராணுவ வீரர்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள இலங்கை அகதி 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த வழக்கை விசாரணை செய்ய நீதிமன்றம் எட்டு நாள்கள் ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# வைத்தியசாலைக்குச் செல்வதற்கு முஸ்லிம்கள் தயக்கம் காட்டல்!

## ரிஷாத் வேதனை



தொடர்ந்தும் கொரோனாவினால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்படுகின்றமையால் முஸ்லிம்கள் வைத்தியசாலைக்குச் செல்லத் தயக்கம் காட்டுகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சில அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் புனித குர்ஆன், தகனம் செய்வதைத் தடை செய்யவில்லை என்று தவறாகக் கூறுகிறார்கள்.

எனினும் உண்மையை புரிந்து கொள்ள ஒருவர் குர்ஆனை நேர்மையான முறையில் படிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் கொரோனாவால் பலியான ஒரு குழந்தை தகனம் செய்யப்பட்டதால், முஸ்லிம்கள் வருத்தமடைந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காத்தன்குடி உள்ளிட்ட முஸ்லீம் பகுதிகளை தனிமைப்படுத்தியமையால் முஸ்லிம் வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

# காய்ச்சல், மூச்சுத்திணறலால் வைத்தியசாலையில் சசிகலா கொரோனா தொற்று இல்லை; வரும் 27-ந் தேதி விடுதலை



சொத்து குவிப்பு வழக்கில் சுப்ரீம் கோர்ட்டால் 4 ஆண்டுகள் சிறை த்தண்டனை விதிக்கப்பட்டதை அடுத்து சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் பெங்களூரு பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். இதில் சசிகலா தனக்கு விதிக்கப்பட்ட ரூ.10 கோடியே 10 ஆயிரம் அபராதத்தை கடந்த 2020-ம் ஆண்டு செலுத்தினார். இதையடுத்து தண்டனை காலம் முடிவடைவதையொட்டி சசிகலா வருகிற 27ஆம் திகதி விடுதலை ஆகிறார்.

இதனால் தான் விடுதலை ஆகப்போகும் தினத்தை சசிகலா ஆவலுடன் எதிர்நோக்கி காத்திருக்கிறார். இந்த நிலையில் நேற்று பெங்களூரு சிறையில் சசிக லாவுக்கு திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளது. காய்ச்சல் மற்றும் மூச்சுத் திணறலால் அவர் அவதிப்பட்டதை அடுத்து அவருக்கு முதல் கட்டமாக சிறையில் உள்ள வைத்தியசாலையில் டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர்.

அவருக்கு மூச்சுத்திணறல் பாதிப்பு அதிகமாக இருப்பதை அடுத்து, நேற்று மாலை 5.45 மணியளவில் மேல்சிகிச்சைக்காக அவர் அம்புலன்ஸ் மூலம் பெங்களூரு சிவாஜி நகரில் உள்ள பவுரிங் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அம்புலன்சில் இருந்து இறங்கிய அவரை சக்கர நாற்காலியில் உட்கார வைத்து பொலிஸாரும், மருத்துவ ஊழியர்களும் ஆஸ்பத்திரிக்குள் அழைத்து சென்றனர். அப்போது அவர் நல்ல நிலையில் இருந்ததை பார்க்க முடிந்தது.

அங்கு தண்டனை கைதிகளுக்கான வார்டில் அவர் அனுமதிக்கப்பட்டு உள்ளார். அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள். அவருக்கு காய்ச்சல், மூச்சுத்திணறல் அறிகுறி தென்படுவதால் சசிகலாவிற்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து அவருக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. இதில் ரத்த அழுத்தம், சர்க்கரை அளவு சீராக இருப்பது தெரியவந்தது. இருப்பினும் ரத்தத்தில் ஆக்சிஜன் அளவு 84 சதவீதமாக இருப்பதாகவும், இதனால் மூச்சுத்திணறல் அவருக்கு ஏற்பட்டு வருவதாகவும், எனவே அதற்காக அவருக்கு ஆக்சிஜன் செலுத்தி சிகிச்சை அளித்து வருவதாகவும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

சசிகலாவின் உடல்நிலை சீராக உள்ளது. சசிகலாவிற்கு தற்போது மூச்சுதிணறல் குறைந்துள்ளது. 2 அல்லது 3 நாள்கள் மருத்துவர்கள் கண்காணிப்பில் இருக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

# நடராஜனுக்கு வரவேற்பு அளிக்க தடை அமைக்கப்பட்டிருந்த மேடை அகற்றம்

ஆஸ்திரேலிய பயணத்தில் தமிழகத்தைச் சேர்ந்த அஸ்வின், டி. நடராஜன், வாஷிங்டன் சுந்தர் ஆகிய 3 பேர் இடம் பெற்றிருந்தனர். வேகப்பந்து வீச்சாளர் நடராஜன் தனது அறிமுக சர்வதேச போட்டியில் சாதித்தார். 29 வயதான அவர் பெங்களூரில் இருந்து தனது சொந்த ஊரான சின்னப்பம்பட்டிக்கு இன்று வருகிறார்.

கடந்த மாதம் 6ஆம் திகதிதான் நடராஜனின் மனைவி பவித்ராவுக்கு சேலத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்தது. அதேநேரத்தில் இந்திய அணியில் இடம்பிடித்து ஆஸ்திரேலியா சென்றுவிட்டதால் முதன்முதலாக தனது குழந்தையைக் காணும் ஆர்வத்தில் நடராஜன் உள்ளார்.

சொந்த ஊர் திரும்பும் அவருக்கு ஊர்மக்கள் சார்பாக பிரமாண்ட வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இதற்கான மேடை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அவர் வரும் வழியில் பனர் வைத்து அசத்த இருந்தனர்.

நடராஜன் வெளிநாட்டில் இருந்து வருவதால் அவருடன் கைக்குலுக்கினால், சால்வை அணிவித்தால், அருகில் சென்றார் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை மீறியதாகிவிடும் எனச் சுகாதாரத்துறை வரவேற்புக்கு தடை விதித்தது.

மேலும், அவர் பெற்றோரிடம் வெளிநாட்டில் இருந்து வருவதால் 14 நாட்கள் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என அறிவிறுத்தியுள்ளனர். அமைக்கப்பட்டிருந்த மேடையும் அகற்றப்பட்டது.

முன்னதாக அவரது நண்பர்கள் கூறும்போது, நடராஜனுக்கு மாலை 4.15 மணிக்கு சின்னப்பம்பட்டி பஸ் நிலையம் சந்தைப்பேட்டையில் இருந்து அவரது வீடு வரை சிறப்பான வரவேற்பு ஊர்வலம் நடக்கிறது. மேலும் அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக அரசு மேல்நிலைப்பள்ளியின் பின்புறம் மேடை அமைக்கப்பட்டுள்ளது.

நாளையே (22ஆம் திகதி) சென்னைக்கு புறப்பட்டு சென்று விடுவார் என்பதால் அவரை பார்த்து வாழ்த்து தெரிவிக்க விரும்புபவர்கள் இன்று மாலையே வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளலாம் என்றனர்.





**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1983.10.18
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - பூரட்டாதி 1
செவ் - 7 இல்
பாவம் - 62 3/4
கல்வி - A/L
தொழில் - ஆஸ்திரேலியா PR
எதிர்பார்ப்பு - ஆஸ்திரேலியா வர விரும்பும் ஆசாரிப் பெண் தேவை.

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1990.05.04
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - பூரம்
சூ/செவ் - -------
பாவம் - 32 3/4
கல்வி - A/L
தொழில் - தாதியர்
எதிர்பார்ப்பு - விவாகரத்தான பெண் ஒரு பிள்ளை உண்டு விரும்புவர் ஆசாரி குல ஆண் தொடர்பு கொள்ளலாம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528


# சீரம் நிறுவனத்தில் இன்று மதியம் தீ விபத்து அணைக்கும் முயற்சியில் தீயணைப்புப்படை



ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் அஸ்ட்ரா ஜெனேகா நிறுவனம் இணைந்து உருவாக்கி உள்ள கொரோனாத் தடுப்பூசி மருந்தை, இந்தியாவில் கோவி ஷீல்டு என்ற பெயரில் சீரம் நிறுவனம் தயா ரிக்கிறது. தடுப்பூசி போடும் பணி தொடங்கியிருப்பதால் மருந்து தயாரிக்கும் பணி விறு விறுப்பாக நடை பெற்று வருகிறது.

இந்நிலையில் மகாராஷ்ரா மாநிலம் புனேயில் உள்ள சீரம் நிறுவனத்தில் இன்று மதியம் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. நிறுவனத்தின் முதலாவது முனையத்தில் தீப்பிடித்துள்ளது. இதன் காரணமாக அச்சமடைந்த ஊழியர்கள் அவசரம் அவசரமாக வெளியேறினர். அலுவல கத்தில் இருந்து கரும்புகை வெளியேறியது.

தீ விபத்து பற்றி தகவல் அறிந்த தீயணைப்புப் படை வீரர்கள் 10 வாகனங்களில் சம்பவ இடத்திற்கு விரைந்து, தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.








# மெக்ஸிக்கோ தடுப்புச் சுவர் நிதிக்கு CUT 15 கோப்புகளில் பைடன் கையொப்பம்

## பதவி ஏற்ற முதல் நாளிலேயே அதிரடி



மெக்ஸிக்கோ எல்லையில் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட நிதியை நிறுத்தி வைக்க அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்றுள்ள ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுப் பதவியேற்ற அவர் முதல் நாளில் 15 முக்கியக் கோப்புகளில் கையெழுத்திட்டுள்ளார். முதலாவதாக மெக்ஸிக்கோ எல்லையில் தடுப்புச்சுவர் கட்ட ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்தி வைத்து அவர் உத்தரவிட்டார்.

இந்தச் சுவர் திட்டம்தான், 2016ம் ஆண்டு ட்ரம்ப் வெற்றிக்கு முக்கியக் காரணமாகக் கருதப் பட்டது. இதனைத் தொடர்ந்து அமெரிக்கர்கள் அனைவரும் பொதுவெளியில் முகக் கவசம் அணிவதை கட்டாயமாக்கும் மசோதாவில் பைடன் கையெழுத்திட்டுள்ளார்.

அடுத்ததாக குறிப்பிட்ட சில இஸ்லாமிய நாடுகளுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கியும், மேலும் பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் மீண்டும் இணைவதற்கான செயல்முறையைத் தொடங்கும் திட்டங்களுக்காகவும் பைடன் கையெழுத்திட்டார்.

# பெருந்தன்மையான வாசகங்களுடன் ட்ரம்ப் – அதிபர் பைடனுக்கு கடிதம்



வெள்ளை மாளிகையை விட்டு வெளியேற முன் ட்ரம்ப் தனக்கு ஒரு கடிதம் எழுதிவைத்து விட்டுச் சென்றதாக அமெரிக்காவின் புதிய அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், அதிபரின் பாரம்பரிய அலுவலகமாக ஓவல் அலுவலகத்தில் இருந்து இந்தக் கடிதம் தனக்கு கிடைக்கப் பெற்றதாக தெரிவித்தார். இருப்பினும் கடிதத்தில் உள்ள சாராம்சங்கள் குறித்து செய்தியாளர்களுக்கு தெரிவிக்க மறுத்துவிட்டார்.

அதே நேரத்தில் கடிதத்தில் பெருந்தன்மையான வாசகங்கள் இடம்பெற்றிருந்ததாக பைடன் குறிப்பிட்டார். முன்னதாக பைடன் பதவியேற்கும் விழாவில் தான் பங்கேற்பதில்லை என்று கூறிய ட்ரம்ப், அதன்படியே அந்நிகழ்ச்சியைப் புறக்கணித்துச் சென்றது குறிப்பிடத்தக்கது.

# ஒற்றுமை இல்லாமல் அமைதி நிலைக்காது, அமெரிக்கர் அச்சம் கொள்ளத் தேவையில்லை

## புதிய அதிபர் நாட்டு மக்களுக்கு அழைப்பு

அமெரிக்க மக்களுக்கு வேலை வாய்ப்பு குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என புதிய அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய அதிபராக பொறுப்பேற்றுக் கொண்ட பைடன், மக்களிடையே உரையாற்றும் போது, இது நெருக்கடி மற்றும் சவாலின் வரலாற்றுப் பாதை என்று குறிப்பிட்டார். ஒற்றுமையாக இருந்தால், ஒன்றாகச் செயல்பட்டால் முன்னேற முடியும் என்று கூறிய அவர், அனைத்தையும் புதிதாகத் தொடங்கலாம் என நாட்டுமக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

தொடர்ந்து பேசிய அவர், கொரோனா வைரஸ் ஏராளமானோரின் உயிரை பறித்துள்ளது எனவும் லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு பறிபோய் உள்ளதாகவும் தெரிவித்தார். உள்நாட்டு பயங்கரவாதம் மற்றும் வெள்ளையின வாதம் முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்று கூறிய அவர், நாட்டை ஒன்றிணைப்பதற்கு ஒட்டுமொத்த மக்களும் உறுதுணையாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.



ஒற்றுமை இல்லாமல் அமைதி நிலைக்காது என்று கூறிய ஜோ பைடன், வருங்காலத்தில் அமெரிக்கா சிறப்பான நாடாக திகழும் என்று நம்பிக்கை தெரிவித்தார். ஒருவருக்கொருவர் மரியாதையுடனும் இணக்கமாகவும் இருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த அவர், அமெரிக்க மக்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டிய தருணம் இது என்றும் ஒட்டுமொத்த அமெரிக்கர்களுக்கும் அதிபராகவே நான் இருப்பேன் என்றும் ஜோ பைடன் கூறியுள்ளார்.

# ஜேர்மனியில் ஊரடங்கு பெப்ரவரி 14 வரை நீடிப்பு

கொரோனாவால் மோசமாக பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளில் ஜேர்மனியும் ஒன்று. அங்கு கொரோனா வைரஸின் 2-வது அலை வேகமாகப் பரவிவருகிறது. கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும், உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

ஜெர்மனியில் 20 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 49 ஆயிரத்து 600க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த கொரோனா கட்டுப்பாடுகளை தீவிரமாக்குவது குறித்து அரசு தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வந்தது.

இதற்கிடையே, புதிய வகை உருமாறிய கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருவதால் ஜெர்மனியில் மீண்டும் ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஜனவரி 31-ம் திகதி வரை அமுலில் உள்ள முழு ஊரடங்கு பெப்ரவரி 14-ம் தேதி வரை நீடிக்கப்படுகிறது. கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் வகையில் இந்த முழு ஊரடங்கை கடைப்பிடிக்க முடிவு செய்துள்ளதாக அதிபர் ஏஞ்சலா மெர்கல் தெரிவித்துள்ளார்.

# கடல்வழி சட்டவிரோத புலம்பெயர்வு படகு கவிழ்ந்து 62 பேர் உயிரிழப்பு







மேற்கு ஆபிரிக்க நாடான மவுரித்தேனியாவிலிருந்து அட்லாண்டிக் பெருங்கடலில் டசின் கணக்கான புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற படகு விபத்துக்குள்ளானதில் குழந்தைகள் உட்பட 62 பேர் உயிரிழந்துள்ளதாக ஐ.நா.வின் இடம்பெயர்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.


குறைந்த பட்சம் 150 பேரை ஏற்றிச் சென்ற படகே எரிபொருள் முடிந்த நிலையில் சில நாட்கள் கடலில் தத்தளித்த நிலையில் மவுரித்தேனியாவை நெருங்குவதற்கு முன்பாக இந்த விபத்து நடந்துள்ளது.

அவர்களில் 83 பேர் கரைக்கு நீந்தி தப்பினர் அவர்களுக்கு அதிகாரிகள் உதவி அளித்து வருவதாக சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு (IOM) தெரிவித்துள்ளது.

ஐ.ஓ.எம் ஆரம்பத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 58 ஆக அறிவித்த நிலையில் மேலும் நான்கு உடல்கள் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்படுள்ளது.

நவம்பர் 27 ஆம் திகதி கப்பல் காம்பியாவிலிருந்து புறப்பட்டதாக தப்பிப்பிழைத்தவர்கள் தெரிவித்தனர்.

# நியூயோர்க் ஹெலிகொப்டர் விபத்து 3 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தேசிய பாதுகாப்பு படை வீரர்கள் நேற்று ஹெலிகொப்டரில் வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். இந்த ஹெலிகொப்டர் மெண்டன் என்ற பகுதியில் பறந்துகொண்டிருந்தபோது, கட்டுப்பாட்டை இழந்து தரையில் விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது.

இந்த விபத்தில் ஹெலிகொப்டரில் இருந்த 3 வீரர்களும் உயிரிழந்தனர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

வீரர்களின் மறைவு குறித்து வேதனை தெரிவித்த நியூயோர்க் கவர்னர், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார். மேலும் வீரர்களின் மறைவுக்கு துக்கம் அனுசரிக்கும் வகையில், அரசு அலுவலக கட்டிடங்களில் தேசியக்கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# தாங்கள் கனவு நிறைவேற்றுபவர்கள் துணை அதிபர் கமலா ஹரிஸ் உரை

தாங்கள் கனவு காண்பவர்கள் மட்டுமல்ல, அதை நிறைவேற்றுபவர்கள் என்று அமெரிக்காவின் புதிய துணை அதிபர் கமலா ஹரிஸ் உரையாற்றியுள்ளார்.

அமெரிக்கா தற்போது கடினமான சூழலை சந்தித்து வருவதாகவும், அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால் தான் இதனை கடக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாமல் உள்நாட்டு போரின்போது ஆபிரகாம் லிங்கனின் சாதனைகளை மேற்கோள் காட்டிய அவர், இனவெறிக்கு எதிராக பாடுபட்ட மார்ட்டின் லூதர் கிங்கின் செயல்பாடுகளையும் குறிப்பிட்டு பேசினார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# வடக்கில் கடந்த 20 நாள்களில் 300 இற்கு மேல் தொற்றாளர்கள்!

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தகவல்



வடக்கு மாகாணத்தில் கடந்த ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நேற்றுவரையான காலப்பகுதியில் 351 பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழில் அவரது அலுவலகத்தில் நேற்று (புதன்கிழமை) நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

வடக்கு மாகாணத்தில் கடந்த ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நேற்று வரை 351 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில், வவுனியா மாவட்டத்தில் 234 பேருக்கும், மன்னாரில் 70 பேருக்கும் யாழ்ப்பாணத்தில் 32 பேருக்கும் கிளிநொச்சியில் பத்துப் பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எங்களுக்கு கடந்த வாரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் கொரோனா தொற்று அபாயம் கூடிய பகுதியில் இருந்து அபாயம் குறைந்த பகுதிக்கு வருகை தருவோரைத் தமது அனுமதியின்றித் தனிமைப்படுத்த வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் அங்கிருந்து வருபவர்களை தற்போது நாங்கள் தனிமைப்படுத்துவதில்லை. அப்படி கட்டாயமாக தனிமைப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்று தனிமைப்படுத்தும் நடவடிக்கையை எதிர்காலத்தில் மேற்கொள்வோம்.


அத்தோடு, தற்போது நாடு முழுவதும் இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டு வருவதற்காக பல கட்டுப்பாடுகளுடன் தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பாடசாலைகள், சினிமா திரையரங்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் வடக்கு மாகாணத்திலுள்ள சந்தைகளை மீளவும் பழைய இடங்களில் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், திருமண மண்டபங்களில் ஆகக்கூடியது 150 பேருடன் திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கியிருக்கின்றோம். மேலும் ரயில் சேவைகளும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

இப்படியான ஒரு சூழ்நிலையில், கொரோனாத் தொற்று அபாயம் அதிகமாக இருக்கும் பகுதிகளில் இருந்து வருபவர்களை தனிமைப்படுத்த வேண்டாம் எனும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமானது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.



## கொரியத் தூதுவரை சந்தித்தார் டக்ளஸ்!

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் கொரியத் தூதுவர் வூன் ஜின் ஜியோன்ங்க்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

மாளிகாவத்தையில அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் (புதன்கிழமை) இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இலங்கையின் கடற்றொழில் செயற்பாடுகளின் அபிவிருத்தி மற்றும் நாடளாவிய ரீதியில் மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்தி போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

## டிக்கோயா வைத்தியசாலை தாதி ஒருவருக்கு தொற்று!

டிக்கோயா வைத்தியசாலையின் தாதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்த தாதிக்கே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக டிக்கோயா வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து அவரை சிகிச்சை நிலையத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலம் டிக்கோயா வைத்தியசாலையின் 20 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை வீதியோர வியாபாரிகள் ஆர்ப்பாட்டம்!



திருகோணமலையில், வீதியோர வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து,வீதியோர வியாபாரிகளால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கண்டி வீதியில், மட்டிக்களி பகுதியில் வீதியோர மீன் வியாபாரிகளது உடைமைகளை நகர சபையினர் கையகப்படுத்தி, அந்தப் பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று (புதன்கிழமை) இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

கொரோனா தாக்கம் அதிகரித்திருந்தபோது பொதுச்சந்தைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. அப்போது வீதியோரங்களில் வியாபாரம் செய்வதற்காக அனுமதி வழங்கப்பட் டிருந்த நிலையில் பலர் வீதியோர வியாபார நடவடிக்கைகளை இன்று வரை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த வியாபாரிகளிம்இருந்து நாள் ஒன்றுக்கு 100 முதல் 150 ரூபா வரை நகர சபையால் நிதி வசூலிக்கப்பட்டு அவர்களுக்கு பற்றுச்சீட்டும் வழங்கப்பட்டிருந்தது.

எனினும், திடீரென நகர சபையால் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையின் காரணமாக தாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், மக்கள் அன்றாடம் நடமாடும் பகுதிகளில் குறித்த வியாபாரத்தை முன்னெடுத்தால் மாத்திரமே போதியளவு வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியுமெனவும் நகர சபையால் ஒதுக்கப்பட்டிருக்கும் பகுதியில் வியாபாரத்தை முன்னெடுத்தால் தமக்கு நஷ்டம் ஏற்படும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு தமது பிரச்சினைக்குத் தகுந்த முடிவினைப் பெற்றுத் தருமாறு வீதியோர வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சீனி இறக்குமதியில் மோசடிகள் இல்லை!

### அமைச்சர் லசந்த மறுப்பு

சீனி இறக்குமதியில் 10 பில்லியன் ரூபா வரிமோசடி இடம்பெற்றிருக்கவில்லை என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன தெரிவித்துள்ளார்.



தனியார் நிறுவனமொன்றுக்கு சீனி இறக்குமதிக்காக வரிச்சலுகை வழங்கப்பட்டதன் ஊடாக இந்த வரி மோசடி இடம்பெற்றதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், நாடாளுமன்றில் இது தொடர்பாகப் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கேள்வியெழுப்பினர்.

இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன –

அவ்வாறான வரிமோசடிகள் இடம்பெறவில்லை எனவும் அது தொடர்பான அறிக்கைகளைத் தாம் சமர்ப்பிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்தோடு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் அதில் வரிமோசடி இடம்பெற்றதாகப் பதிவாகவில்லை எனவும் இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன தெரிவித்துள்ளார்.

## தீர்ப்புக்கள் குறித்துப் பேசுவதற்கு எம்.பிக்களுக்கு அதிகாரமுள்ளது!



நீதிபதிகளின் தீர்ப்புகள் தொடர்பாகப் பேசுவதற்கு நாடாளுமன்றில் உள்ள 225 பேருக்கும் அதிகாரம் உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

மக்களின் நீதிசார்ந்த அதிகாரங்கள் நாடாளுமன்றத்தின் ஊடாகவே நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்மையால் தீர்ப்புக்கள் தொடர்பாக விமர்சனங்களை முன்வைப்பதற்கு நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் நாடாளுமன்றில் கருத்து தெரிவித்த அவர்:-

நீதிபதிகளின் தனிப்பட்ட விடயங்கள் அல்லாது அவர்களால் வழங்கப்படும் தீர்ப்புகள் குறித்தே விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டார்.

ஆகவே அவர்களால் பெற்றுக்கொடுக்கப்படும் தீர்ப்புக்கள் தொடர்பாகப் பேசுவதற்கு நாடாளுமன்றில் உள்ள 225 பேருக்கும் அதிகாரம் உள்ளது என்றும் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=







லக்சுமி வெதுப்பகம்
ஆறுகால் மடத்திலும்
பெற்றுக் கொள்ளலாம்.

கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.01.2021இல் வெளியிடப்பெற்றது.